ஆண்டு பட்டிகை வழக்கு எண்.54/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 54/2025 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : கிருபாகரன் ( கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : சீனிவாசன் |
| Village | : தலைமை காவலர் |
| Taluk | : நத்தம் காவல் நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 46/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of September 2025

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.09.2024ம் தேதி நானும், முதல் நிலைக் காவலர் 131 திரு.ராபர்ட் லாரன்ஸ் என்பவரும் சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் என்பவருடன் 15.00 மணிக்கு ரகசிய தகவலின் அடிப்படையில் பரளி கிராம பகுதிகளில் ரோந்து செய்தோம். ரகசிய தகவலாளி எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு அரசு அனுமதியின்றி மது விற்பனை செய்வதாக தேத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வில்லி மகன் அசோக் என்பவரின் இடத்தை எங்களுக்கு காட்டிவிட்டு தகவலாளி சென்றுவிட்டார். அதன்பேரில் 15.45 மணிக்கு அவ்விடத்தில் இருந்த புதர் செடியில் பிளாஸ்டிக் சாக்குமூட்டை இருந்தது. அதை நாங்கள் திறந்து பார்த்தபோது பாண்டிச்சேரியைச் சேர்ந்த மது வகைகளான 180 ML அளவுள்ள Blue Grape Brandy 10 பாட்டில்களும், 180 ML அளவுள்ள Crown of Crowns Brandy 21 பாட்டில்களும், மேலும் லேபிள்கள்

கிழிக்கப்பட்டு சீல் உடைக்கப்பட்டு 180 ML அளவுள்ள மது பாட்டில்கள் 2ம் இருந்தன.

2. மேற்படி மது பாட்டில் சம்பந்தமாக அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது தெரியாது என்று கூறிவிட்டார்கள். அந்த மது பாட்டில்கள் இருந்த இடத்திற்கு அருகில் இருந்த அசோக் என்பவரின் வீட்டில் யாரும் இல்லை. பின்னர் லேபிள்கள் கிழிக்கப்பட்டு மூடி திறந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த 2 பாட்டில்களை நுகர்ந்து பார்த்தபோது, கொடிய நெடியுடைய வாசனை வந்ததால் அவற்றை பகுப்பாய்விற்கு அனுப்புவதற்காக வெள்ளை நாடாவால் சுற்றி போலீஸ் பட்டன் சீல் வைத்து மற்ற கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களுடன் சேர்த்து மேற்கண்ட சொத்துக்களை சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் தனி நபர் சாட்சி யாரும் முன்வராததால் என் முன்னிலையிலும், முதல் நிலைக் காவலர் திரு.ராபர்ட் லாரன்ஸ் என்பவர் முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து தடை செய்யப்பட்ட பாண்டிச்சேரி மது பாட்டில்களை விற்பனை செய்த அசோக் என்பவர் மீது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். அதன்பேரில் ஆஜர் எதிரி மீது நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024 பிரிவு 4(1–A) TNP Actன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் 3 புகைப்படங்களில் உள்ள மது பாட்டில்களைதான் சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.16 18:12:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 54/2025 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : ராபர்ட் லாரன்ஸ் ( கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : தைனீஸ் |
| Village | : தலைமை காவலர் |
| Taluk | : நத்தம் காவல் நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 39/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of September 2025

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.09.2024ம் தேதி 15.00 மணிக்கு நானும், முதல் நிலைக் காவலர் 1307 திரு.கிருபாகரன் என்பவரும் நிலைய அலுவலில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சுமார் 15.45 மணியளவில் தேத்தாம்பட்டி அருகே போதைப் பொருள் தடுப்பு சம்பந்தமாக பரளி கிராம பகுதிகளில் ரோந்து சென்றபோது ரகசிய தகவலாளியின் தகவலின் பேரில் வில்லி மகன் அசோக் என்பவரின் வீட்டின் எதிரே உள்ள புதரில் பிளாஸ்டிக் சாக்கு மூட்டை ஒன்று இருந்தது. அதை நாங்கள் திறந்து பார்த்தபோது பாண்டிச்சேரியைச் சேர்ந்த மது வகைகளான 180 ML அளவுள்ள Blue Grape Brandy 10 பாட்டில்களும், 180 ML அளவுள்ள Crown of Crowns Brandy 21 பாட்டில்களும், மேலும் 2 மது பாட்டில்கள் சீல் உடைக்கப்பட்டு, லேபிள்கள்

கிழிக்கப்பட்டு மூடி திறந்த நிலையில் இருந்தது. அதை நாங்கள் நுகர்ந்து பார்த்தபோது கெட்ட நெடியுடன் கூடிய வாசனை வந்ததால் அதை பகுப்பாய்விற்காக ஒரு வெள்ளை நாடாவால் சுற்றி போலீஸ் பட்டன் சீல் வைத்து பகுப்பாய்விற்காக எடுத்து வைக்கப்பட்டது.

2. சம்பவ இடத்தில் அக்கம் பக்கம் இருந்தவர்களை நாங்கள் விசாரித்தபோது அவர்கள் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, தனி நபர் சாட்சிகள் யாரும் முன் வராததால் நானும், அ.சா.1ம் சாட்சியாக இருக்க சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் மேற்படி வழக்குச் சொத்துக்களை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். அதன்பேரில் தேத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வில்லி என்பவர் மகன் அசோக் என்பவர் மீது நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024 பிரிவு 4(1–A) TNP Actன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் 3 புகைப்படங்களில் உள்ள மது பாட்டில்களைதான் சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.16 18:12:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.54/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 54/2025 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : அழகுராஜ் ( ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| Father's/Husband's Name | : பழனியாண்டி |
| Village | : தலைமைக் காவலர் |
| Taluk | : சாணார்பட்டி காவல் நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 37/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of September 2025

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது சாணார்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரி அசோக் என்பவரை தெரியும். கடந்த 12.09.2024ம் தேதி காலை 7.30 மணிக்கு நானும், முதல் நிலைக் காவலர் 417 திரு.ஜெரால்டு ராஜா என்பவரும் நத்தம் காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களுடன் புறப்பட்டு பரளிபுதூர், தேத்தாம்பட்டிக்கு நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024, பிரிவு 4(1-A) TNP Act என்ற வழக்கு சம்பந்தமாக அதன் எதிரியான அசோக் என்பவரை தேடி ரகசிய தகவலின் பேரில் அவரது வீட்டிற்கு சென்றபோது, அவரது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தார். அவரை சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணம் கூறி அவரது உறவினருக்கு தகவல் சொல்லி விசாரணை செய்தபோது, காலை 8.15 மணியளவில் அவர் எங்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி தாமாக முன்

வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரியிடம் சார்பு ஆய்வாளர் கையொப்பம் வாங்கினார். அதில் நானும், மு.நி.கா. ஜெரால்டு ராஜா என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 9.30 மணிக்கு எதிரியை திரேக பரிசோதனைக்கு உட்படுத்தி தக்க வழிக்காவல் மூலம் பாரா வசம் ஒப்படைத்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.16 18:13:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்